## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், தேவகோட்டை

O.S.No.52/2022

| | | |
|---|---|---|
| வாதி / பிரதிவாதி தரப்பு சாட்சி | : | வாசா. 1 |
| பெயர் | : | சின்னையா |
| தகப்பனார் பெயர் | : | செபஸ்தியான் |
| தொழில் | : | |
| கிராமம் | : | |
| தாலுகா | : | |

2025ம் ஆண்டு நவம்பர் மாதம் 11ம் நாள் செவ்வாய் 1872 ஆம் ஆண்டு இந்திய சாட்சிய சட்டத்தின்படி பெஞ்சு கிளார்க் திரு.ரா.நாகநாதன் என்பவரால் ஆணையிட்டு உறுதி கூறி சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டது.

சாட்சியின் ஆதார் அட்டை சரிபார்க்கப்பட்டது.

**<u>முதல் விசாரணை:</u>**

நான் இந்த வழக்கின் 1ம் வாதி ஆவேன். வாதி தரப்பு 1வது சாட்சி ஆவேன். எனது தரப்பு சாட்சியை எழுத்துமூலமாக நிரூபணவாக்குமூலத்தின் பேரில் நீதிமன்றத்தில் சமர்பிக்கிறேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அதில் உள்ள சங்கதிகள் அனைத்தும் நான் சொல்லி தயார் செய்யப்பட்டது.

1. தாவாச் சொத்திற்கு ஆன்லைனில் எடுக்கப்பட்ட கிராமப்புலப்படம் ஜெராக்ஸ் நகல் – வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.
2. தாவச் சொத்திற்கு இருந்த கூரை வீட்டிற்கு சிவத்தியான் பெயரில் செலுத்தப்பட்ட வரி ரசீதுகள் ( 8) – அசல் வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.
3. பட்டா எண்.469–க்கான 10(1) – கம்யூட்டர் நகல் வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.
4. பட்டா எண்.469–க்கான வரி ரசீது – அசல் வா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

5. 1–ம் வாதியின் ஆதார் அட்டை – நகல் (அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது) வா.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.
6. 2–ம் வாதியின் ஆதார் அட்டை – நகல் (அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது) வா.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.
7. 1,2 வாதிகளின் வாக்காளர் அடையாள அட்டைகள் – நகல்கள் வா.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.
8. 20.10.2021 தேதிய வாதிகள் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு அஞ்சலக ரசீது உடன் – கையிருப்பு நகல் வா.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**முதல் விசாரணை தொடர்ச்சி:**

வாதிகளின் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க மேலும் ஆவணங்கள் குறீயிடு செய்யவதற்கு முதல் விசாரணையின் தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது.

PREMI R

Digitally signed by PREMI R
Date: 2025.11.11 15:40:50 +0530